உ

கடவுள் துணை.

பூதஞ்சேந்தனார்

அருளிச்செய்த

# இனியது நாற்பது மூலமும்

உரையும்.

இவை

சேதுஸம்ஸ்தான வித்வானும்

"செந்தமிழ்"ப் பத்திராசிரியருமான

**ரா. இராகவையங்காரால்**

வெளியிடப்பட்டன.

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

செந்தமிழ்ப் பிரசுரம்—ரு.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1903.

ஸ்ரீ

கடவுள்துணை

# முகவுரை

---

இனியது நாற்பது என்பது கடைச்சங்கம் மருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. கீழ்க்கணக்கு நூல்களாவன:— க-நாலடி, உ-நான்மணிக்கடிகை, ௩-இனியது நாற்பது, ச-இன்னாநாற்பது, ரு-களவழிநாற்பது, சு-கார்நாற்பது, எ-ஐந்திணையைம்பது, அ-ஐந்திணையெழுபது, கூ-திணைமொழியைம்பது, கo-திணைமாலை நூற்றைம்பது, கக-திருக்குறள், கஉ-திரிகடுகம், க௩-ஆசாரக்கோவை கச-பழமொழி, கரு-சிறுபஞ்சமூலம், கசு-முதுமொழிக்காஞ்சி, கஎ-ஏலாதி, கஅ-கைந்நிலை என இவை: இதனை,

*"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூல
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு." என்னும் வெண்பாவினு லறிந்து

கொள்க. நானாற்பதைந்திணை என்புழி நானாற்பது, நாலைந்திணை என் வுரைக்க. கீழ்க்கணக்கு, நாலடி......மெய்ந்நிலைய காஞ்சியோடு ஏலாதி கைந்நிலையவாம் என்ப: என்க. கணக்கு-மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என இருவகைப்படும். ஐம்பது முதல் ஐந்நூறிறுதியாக ஐவகைப் பாவானும் வருவது மேற்கணக்கெனப்படும். அவ்வகை யெண்ணில் அறம்பொருளின்பங்களைப்பற்றி வெண்பா ஒன்றுனே வருவது கீழ்க்கணக்கெனப்படும். இவற்றிற்கிலக்கணம்;—

"மேல்கீழ்க் கணக்கென விருவகைக் கணக்கே."
"மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே."

---

* இவ்வெண்பா, "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப், பால் கடுகு கோவை பழமொழி மாமூல, மின்னிலைய காஞ்சியுட னேலாதியென் பவே, நன்னிலைய தாகுங் கணக்கு" என ஆழ்வார்திருநகரியிற் கிடைத்த பழையதோர் திருக்குறளுரை யேட்டுமுகத்து எழுதப்பட்டுள்ளது. இப்பாடத்து ஐந்திணையெழுபது ஐந்து திணை நூல்கள் என்க; அவை ஐந்திணையைம்பது முதலிய நான்கும், கைந்நிலையும் ஆம்.

"அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறு
மிகுத்துடன் றொகுப்பது மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னெள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே."

"ஐம்பது முதலா வைந்நூ றீறு
வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும்."

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்."

எனவரும் பன்னிருபாட்டியற் சூத்திரங்களாலுணர்க. கீழ்க்கணக்கிற்கு வெண்பாவேயன்றி அதனினமும் ஆம் என்பது முதுமொழிக்காஞ்சியில் "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா-மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை" என வெண்செந்துறை வந்தவாற்றானறிக. மேற்கணக்கிற்கே "ஐம்பது முதலா வைந்நூ றீறு" எனவும் "பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறு" எனவும் சிறுமைக்கும் பெருமைக்கும் எண்வரையறை கூறிக், கீழ்க்கணக்கிற்கு "அவ்வகை யெண்பெறின்" எனவும் "அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி" எனவும் ஓதினமையாற் கீழ்க்கணக்குச் சிறுபான்மை ஐம்பதிற் குறைந்தும் ஐந்நூற்றின் மிக்கும் வருமெனக்கொள்க. இனியது, இன்னா, களவழி, கார்நாற்பதும் ஐம்பதிற் குறைந்துவந்தன. முப்பால் ஐந்நூற்றின் மிக்கு வந்தது. இக்கீழ்க்கணக்கு நூல்களையே தாயபனுவல் என்னும் பெயராற் கூறுவர் எனவும், இவை அறம்பொருளின்பமென்னு மூன்றற்கு மிலக்கணஞ் சொல்லுப எனவும், வேறிடையிடை அவையன்றியுந் தாஅய்ச் செல்வதுமுண்டெனவும், இச்செய்யுட்கள் அடிநிமிராது இரண்டடிமுதல் ஆறடியிறுதியாக வருவன எனவும், அவை எழுத்தினைகன்று காட்டாது சில எழுத்தினான்வருவன எனவும், அவையெண்ணுச் சுருங்கிச் சிலவாகவருவன எனவும், "வனப்பியலுனே" என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்துப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் உரைத்தவாற்றானுணர்ந்துகொள்க. "சின்மென் மொழியாற் றாய பனுவலோ, டம்மை தானே யடிநிமிர் பின்றே" என்ற தொல்

காப்பிய நெறியேபோற்றி இப்பன்னிருபாட்டியற்கண்ணும், "அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி" எனக்கூறியதுங் காண்க. இவ் வினியதுநாற்பது அறப்பொருளின்பம்பற்றிச் சிலவாய மெல்லிய சொற்களால் ஐந்தடியினேறாது நாற்பதாய் எண்ணுச் சுருங்கி வெண் பாவான் வந்தமையாற் கீழ்க்கணக்காயவாறு கண்டுகொள்க.

இந்நூலாசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் என்பார். பூதஞ்சேந்தன் என்பது நிலைமொழி அன் கெட்டு, அம்முச்சாரியை பெற்றுப் புணர்ந்தது. இச்சாரியைப் புணர்ச்சி நிலைவருமொழிகளை முறையே தந்தையும் மகனுமாக முறைப்பெயர்க ளாக்குமிடத்து வருமென்பது "அப்பெயர் மெய்யொழித்து" என் னுந் தொல்காப்பியச் (எழுத். புள்ளி. ௫௫.) சூத்திரத்தாற் பெறப் படுதலின், 'பூதஞ்சேந்தனார்' என்பதற்குப் பூதற்கு மகனாகிய சேந் தன் என்பது பொருளாகக்கொள்க. ஆசிரியர் நச்சினார்க்கினியர் அச்சூத்திரத்திற்குக் கோற்றங்கோற்றனார் என உதாரணங்காட்டி னார். இதனால், இந்நூலாசிரியர் சேந்தன் என்னும் பெயருடையா ரென்பதும், இவர் தந்தையார் பூதனார் என்பதும் நன்கறியலாவன. தந்தையாகிய பூதனார்க்கு 'மதுரைத் தமிழாசிரியர்' என்னுஞ் சிறப் புப் பெயருமுண்டென்பது பூதஞ்சேந்தனாரது அடைமொழிகளாற் புலப்படுகின்றது. இவ்வாறே 'மாற்றூர்கிழார்மகனார் கோற்றங்கோற் றனார்' என்பதனையும் உய்த்துணர்க. பூதஞ்சேந்தனார், கொற்றங் கொற்றனார் என்னும் பெயர்களால் தந்தையரியற்பெயர்களுந் தாமே பெறப்படுதலின் இன்னார்க்கு மகனாரெனப் பின்னருங் கூறல்வேண் டாவாயினும், அத்தந்தையர் சிறப்பு விளங்க மதுரைத்தமிழாசிரியர் மகனார், மாற்றூர்கிழார் மகனார் எனப் புணர்த்து வழங்கப்பட்டன போலும்!

இந்நூலாசிரியர், முதற்செய்யுளிற் சிவபிரானையும், திருமாலையும் பிரமதேவனையும் எடுத்தோதுதலால், இவர் வேதநெறிப்பட்ட ஒழுக் கினர் என்பது புலப்படும். முற்காலத்தே கபிலர் என்னும் புலவ ரால் 'இன்னாநாற்பது' என்னுநூலும், பூதஞ்சேந்தனாரால் 'இனி யது நாற்பது' என்னு நூலும் வெண்பாயாப்பிற் பாடப்பெற்றிரு த்தலை நோக்குமிடத்து, அவ்விருசான்றோருள் முன்னவர் ஒருவர்

விட்டகுறையைப் பின்னவர் நீக்கமுயன்றமை தோன்றும். இவ்வினியதுநாற்பதுச் செய்யுட்களில் ஒருசில 'புறத்திரட்டு' என்னுந்தொகைநூலிற் கோக்கப்பட்டுள்ளன. இந்நூல், பெரும்பான்மை வெண்பாக்கள் மும்மூன்று பொருள்கொண்டு, முடிவாக கஉ௦ இனிய விஷயங்களை எடுத்துரைப்பது. இந்நூற்கு எழுதப்பட்டுள்ள பொழிப்புரை இன்னாரியற்றியதென்று புலப்படவில்லை. அதனுரை நடையினை நோக்குமிடத்து, அதுவும் முற்காலத்ததென்றே தோற்றுகின்றது.

இவ்வினியதுநாற்பதுப் பிரதியொன்று இச்சங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலைக்கண் இருந்தது. இப்பிரதியனுப்பி யுதவியோர் இப்போது கும்பகோணங் காலேஜ் தமிழ்ப்பண்டிதராயுள்ள ஸ்ரீ உ.வே. வை. மு. சடகோபராமாநுஜாசாரியஸ்வாமிகள். அப்பிரதி, ஆசாரியரவர்களால் ஆராய்ந்து எழுதப்பட்டதொன்றாயிருந்ததனால், எனக்கு அந்நூலைப்பற்றிய கவலை அதனை வெளியிடுதன்மட்டிலே ஆயிற்று.

இஃது இம்மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று வெளியாகின்ற "செந்தமிழ்"ப்பத்திரிகையின் நான்காம் பிரசுரமாவது. இவ்வாறே இதுகாறும் அச்சிடப்படாது மறைந்துகிடக்கும் பண்டையோருரைத்த தண்டமிழ்ச் சிறுநூல்களை இச் 'செந்தமிழ்' வாயிலாக வெளியிடக் கருதியிருத்தலின், அப்பழைய ஏடுகளுடைய நல்லோர் அவற்றை இச்சங்கத்துக்கனுப்பியுதவுமாறு அவரைப் பன்முறை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

சேதுஸம்ஸ்தான வித்வான்,

ரா. இராகவையங்கார்,

'செந்தமிழ்'ப்பத்திராசிரியர்.

உ

கடவுள்துணை

மதுரைத்

தமிழாசிரியர் மகனார்

# பூதஞ் சேந்தனார்

அருளிச்செய்த

# இனியது நாற்பது.

மூலமும் உரையும்.

க. கண்மூன் றுடையான்றாள் சேர்தல் கடிதினிதே
தொன்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்த லினிது.

என்பது—கண்மூன்றுடையான் பாதங்களையடைதல் மிகவினிது; பழைய மாட்சிமையுடைய துழாய்மாலையைப் புனைந்தானைத் தொழலினிது; எல்லாரினும் பேணி முந்துற முகநான்குடையானைச் சென்றமர்ந்தேத்தல் இனிது என்றவாறு. (க)

உ. பிச்சைபுக் காயினுங் கற்றன் மிகவினிதே
நற்சவையிற் கைக்கொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவு மேலாயார்ச் சேர்வு.

எ-து—இரந்துண்டாயினுங் கற்றல் மிகவினிது; கல்விகள் நல்லவை முன்னர்த் தமக்கு வந்துதவுதன் மிகவினிது; முத்தையொக்கும் நகையினையுடையார் மெல்லியசொல் இனிது; அதுபோலத் தெளியவும் இனிது மேலாயாரைச் சேர்தல்; எ-று. (உ)

---

* இது சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

௩. உடையான் வழக்கினி தொப்ப முடிந்தான்
மனைவாழ்க்கை முன்னினிது மாணாதா மாயி
னிலையாமை நோக்கி நெடியார் துறத்த
றலையாகத் தானினிது நன்கு.

எ-து—பொருளுடையானது வண்மை இனிது; மனையாளுள்ளமுங் கொழுநனுள்ளமும் வேறுபடாதுபொருந்தின் மனைவாழ்க்கை மிகவினிது; மாட்சிமைப்படாதாயின் நிலையாமையை ஆராய்ந்து நீட்டியாதே துறத்தல் தலைப்பட மிகவினிது; எ-று. (௩)

௪. ஏவது மாறா விளங்கிளைமை முன்னினிதே
நாளு நவைபோகான் கற்றன் மிகவினிதே
யேருடையான் வேளாண்மை தானினி தாங்கினிதே
தேரிற்கொ ணட்புத் திசைக்கு.

எ-து—ஏவியது செய்யும் இளங்கிளைமை ஒருவற்கு மிகவினிது; குற்றங்களிற் செல்லாது நாடோறுங் கற்றல் மிகவினிது; ஏருடையான் வேளாண்மை இனிது; அதுபோல இனிது தான் செல்லுந் திசைக்கு ஆராயின் நட்புக்கோடல்; எ-று. (௪)

௫. யானை யுடைப்படை காண்டன் மிகவினிதே
யூனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

எ-து—யானைகளையுடைய சேனையைக் காண்டல் மிகவினிது; பிறிதொன்றூனைத் தின்று தன்னூனைப் பெருக்காமை மிகவினிது; காட்டியாற்றுக் கரைமருங்கினூர் இனிது; அவைபோல இனிது மானமுடையார் நினைப்பு; எ-று. (௫)

௬. கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்னினிது செங்கோல னாகுத
லெய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு.

எ-து—ஒருயிரைக் கொல்லாமை மிகவினிது; அரசன் கோல்கோடிச் செய்யாமை மிகவினிது; மற்றவன் செங்கோலனாகுதல் மிகவினிது; யார் மாட்டும் எய்துந்திறத்தாற் பொல்லாங்குரையாமை மிகவினிது; எ-று. (௬)

எ. ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது.

எ-து—தமக்கியலுமளவினால் அறஞ்செய்கை மிகவுமினிது; நெறிப்பட்டார் சொல்லும் பயனையுடைய சொல்லினினிமைஇனிது; பழுதிலராகி நாணிலிகளல்லாதாரைக் காப்பாகப் பொருந்தக்கோடல் இனிது; எ-று. (எ)

அ. அந்தண ரோத்துடைமை யாற்ற மிகவினிதே
பந்த முடையான் படையாண்மை முன்னினிதே
தந்தையே யாயினுந் தானடங்கா னாகுமேற்
கொண்டடையா னாக லினிது.

எ-து—மறையவர்க்கு ஒத்துடைமை நிரம்ப மிகவினிது; சுற்றமுடையான் படைகொண்டு செய்யும் ஆண்மை மிகவினிது; தாதையேயாயினும் அவனடங்கானாயின் அவனைக் கொண்டடையானாகல் இனிது; எ-று. (அ)

கூ. ஊருங் கலிமா வுரனுடைமை முன்னினிதே
தார்புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்
கார்வரை யானைக் கதங்காண்டன் முன்னினிதே
யார்வ முடையவ ராற்றவு நல்லவை
பேதுறார் கேட்ட லினிது.

எ-து—தான் நடாத்துகின்ற மிக்கமா வலியுடைமை மிகவினிது; தார்புனையுமன்னர் தமக்குற்ற செருக்களத்துக் கார்வரையைப்போன்ற யானையினது வெகுளியைக் காண்டல் அவர்க்கு மிகவினிது; எல்லா உயிர்கண்மேலும் மிகவும் அன்புடையார் நல்லகேள்விகளை மயக்கமுறாது கேட்டல் இனிது; எ-று. (கூ)

௧0. தங்க ணமர்புடையார் தாம்வாழ்தன் முன்னினிதே
யங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது.

எ-து—தம்மாட்டுச் சேர்வுடையார்தாஞ் செல்வமுடையராதன் மிகவினிது; அங்கண் விசும்பின்கண்விரிந்த நிலாக்காண்டல் இனிது; குற்றமில் செய்கையராகிப் பரிந்தியாவர்க்கும் அன்புடையராதல் இனிது; எ-று.

கக. கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண் பிலாதவரை யஞ்சி யகற
லெனைமாண்புந் தானினிது நன்கு.

எ-து—தனிசுகொண்டு உண்டுவாழாமை காண்டல் இனிது; நிறையி ைன் மாட்சிமையில்லாத பெண்டிரை நீக்கல் இனிது; மனத்தின்கண் மாட்சிமையில்லாதவரை அஞ்சிநீங்குதல் எல்லா மாட்சிமையினும் மிக இனிது; எ-று. (கக)

கஉ. அதர்சென்று வாழாமை யாற்ற வினிதே
குதர்சென்று கொள்ளாத கூர்மை யினிதே
யுயிர்சென்று தாம்படினு முண்ணார்கைத் துண்ணாப்
பெருமைபோற் பீடுடைய தில்.

எ-து—வழிபோய் முயன்று வாழாமை மிகவினிது; யாதானும் ஒரு நூற்குப் பொருளைக் கோட்டிக்கொள்ளாத கூர்மை யினிது; பசியான் உயிர் இறந்துபடினும் உண்ணப்படாதார் கையினுணவை உண்ணாத பெருமைபோலப் பெருமையுடையதில்லை; எ-று. (கஉ)

கங. குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயரிக ளல்லாதார் மாண்புடையார்ச் சேருந்
திருவுந்தீர் வின்றே லினிது.

எ-து—குழவிகள் பிணியுறுது வாழ்தல் இனிது; செவ்விய பொருள் சொல்லினுங் கழறுமவையத்தாரை அஞ்சாதுநின்று சொல்லுங் கல்வி இனிது; மயக்கமுடையரல்லாராய் மாட்சிமையுடையாரை அடையுஞ் செல்வமும் நீங்காதாயின் இனிது; எ-று. (கங)

கச. மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமைத் தானடங்கி வாழ்வினிதே
யூனமொன் றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது.

எ-து—தனக்கு மானமழிந்தபின் உயிர்வாழாமை இனிது; தானிருந்துவாழும் இருப்புச்சிதையாவகை தானடங்கிவாழ்தல் இனிது; குற்றமொன்றின்றி மிக்க பொருளுடைமை எல்லாமக்கட்கும் இனிது; எ-று (கச)

கரு. குழவி தளர்நடை காண்ட லினிதே
யவர்மழலை கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து
மனனஞ்சா னாகு லினிது.

எ-து—குழவிகள் தளர்நடையைக் காண்டல் இனிது; அவர் மழலைச் சொல்லைக் கேட்டல் அமிழ்துபோல மிகவும் இனிது; வினைகிழவன் வந்து சேர்ந்து தான் வெம்மையுறும்பொழுது மனத்தின்கண் அஞ்சாது நிற்றல் இனிது. எ-று; (கரு)

கசு. பிறர்மனை பின்னோக்காப் பீடினி தாற்ற
வறனுழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர் வினிதே
மறமன்னர் தங்கடையுண் மாமலைபோல் யானை
மதமுழக்கங் கேட்ட லினிது.

எ-து—பிறனுடைய மனையாளைப் பின்பு பாராத பெருமை மிகவும் இனிது; நீரின்றி வருந்தும் பைங்கூழ்க்கு மழைசொரித லினிது; வீரத்தையுடைய மன்னர்தம் வாயிற்கடைப் பெரிய மலைபோன்றிருந்த யானைகளது களிப்பான முழக்கங் கேட்டன் மன்னர்க்கினிது; எ-று (கசு)

கஎ. கற்றார்முற் கல்வி யுரைத்தன் மிகவினிதே
மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே
யெட்டுணை யானு மிரவாது தானீத
லெத்துணையு மாற்ற வினிது.

எ-து—கற்றார் முன்பு தங்கல்வியைச் சொல்லி ஏற்றுதல் மிகவினிது; மிக்க அறிவுடையாரைச் சேர்தன் மாட்சிமைப்பட இனிது; எள்ளளவாயினும் இரவாது தான் பிறர்க்கீதல் எல்லாவாற்றானும் இனிது; எ-று. (கஎ)

கஅ. * நட்டார்க்கு நல்ல செயலினி தெத்துணையு
மொட்டாரை யொட்டிக் கொளலதனின் முன்னினிதே
பற்பல தானியத்த தாகிப் பலருடையு
மெய்த்துணையுஞ் சேரல் வினிது. (கஅ)

ககூ. மன்றின் முதுமக்கள் வாழும் பதியினிதே
தந்திரத்தின் வாழுந் தவசிகண் மாண்பினிதே

* இச்சங்கத்திற்குக் கிடைத்த பிரதியில் இப்பாட்டிற்கு உரை காணப் படவில்லை.

யெஞ்சா விழுச்சி ரிருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை யினிது.

எ-து—அம்பலத்தின்கண் அறிவுடையார் வாழும் பதி இனிது; தத்தம் நூல்களிற் சொன்ன நெறியானே வாழும் அருந்தவரது மாட்சியினிது; குறையாத விழுமிய சீரையுடைய இருமுதுமக்களைக் காலையின் கட் டொழுதெழுதல் இனிது; எ-று. (கசு)

உ0. நட்டார்ப் புறங்கூறான் வாழ்த னனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகன் முன்னினிதே
முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கான் மற்றது
தக்குழி யீத லினிது.

எ-து—உற்றாரைப் பழிகூறாது வாழ்தல் மிகவினிது; உண்மையாய நெறியினை விரும்பி யாவரையும் பணிந்தொழுகுதல் மிகவினிது; குறையிலாத பெரும்பொருள்களைத் தேடியவிடத்து அப்பொருளைத் தகுதியுடையார்க்குக் கொடுத்தல் இனிது; எ-று. (உ0)

உக. சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாந்
தகுதியால் வாழ்த லினிது.

எ-து—வஞ்சகரை அடையாதொழுகுதல் இனிது; அறிவுடையார் வாய்மொழியைப் போற்றிக்கோடல் இனிது; அகன்ற இடத்தையுடைய ஞாலத்து வாழுமுயிர்க்கெல்லாம் தகுதிப்பட ஒழுகுதல் இனிது; எ-று.
சலவர்—வஞ்சகர் (உக)

உஉ. பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்த லினிதே
யறம்புரிந் தல்லவை நீக்க லினிதே
மறந்தேயு மாணா மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்த லினிது.

எ-து—பிறன்கைப் பொருள் வெளவாது வாழ்தல் இனிது; அறத்தைச் செய்து பாவங்களை நீக்குதல் இனிது; மறந்தாயினும் மாட்சிமைப்படாத அறிவில்லாரைச் சேராத் திறங்களைத் தெரிந்துவாழ்தல் இனிது; எ-று. (உஉ)

உங. வருவா யறிந்து வழங்க லினிதே
யொருவர்பாங் காகாத வூக்க மினிதே
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்த லினிது.

எ-து—தனக்குப் பொருள்வருவாயை அறிந்துகொடுத்தல் இனிது; ஒருவர்க்குச் சார்வாகாத ஊக்கம் இனிது; பெரிய பயனையுடைத்தாயினும் தாம் நினைந்தவற்றை ஆராயாதுசெய்யாது இயற்கையான் வாழ்தல் இனிது ; எ-று. (உங.)

உச. காவோ டறக்குளந் தொட்டன் மிகவினிதே
யாவோடு பொன்னீத லந்தணர்க்கு முன்னினிதே
பாவமு மஞ்சாராய்ப் பற்றுந் தொழின்மொழிச்
சூதரைச் சேர்த லினிது.

எ-து—காவினையும் ஆக்கிக் குளத்தினையுந் தொட்டல் மிகவும் இனிது ;ஆவும் பொன்னும் அந்தணர்க்கீதன் மிகவும் இனிது; பாவத்தையுமஞ்சாது பொருண்மேற்பற்றுந் தொழிலையும் மொழியையுமுடைய சூதரை நீக்கல் இனிது ; எ-று. (உச)

உரு. வெல்வது வேண்டி வெகுளாதா னோன்பினிதே
யொல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினிதே
யில்லது காமுற் றிரங்கி யிடர்ப்படார்
செய்வது செய்த லினிது.

எ-து—தான் வெல்வதனைவேண்டிப் பிறரோடு வெகுளாதான் பொறை இனிது ; தனக்கியலுமளவு மேற்கொண்டதொன்றை நடாத்துவானாற்றல் இனிது ; தனக்கில்லையதனைக் காதலித்து இரங்கியிடர்ப்படாது இயல்வதனைச்செய்தல் இனிது ; எ-று. (உரு)

உசா. ஐவாய வேட்கை யவாவடக்கன் முன்னினிதே
கைவாய்ப் பொருள்பெறினுங் கல்லார்கட் டீர்வினிதே
நில்லாத காட்சி நிறையின் மனிதனைப்
புல்லா விடுத லினிது.

எ-து—ஐம்பொறியுடைய வேட்கையையும் அவாவினையும் அடக்கல் மிகவினிது ; தன் கையின்கண்ணே பொருள் பெறினும் கல்லாதானை

விடுதலினிது; நிலையில்லாத அறிவையுடைய திண்மையில்லாத மக்களை மேவாது விடுதல் இனிது; எ-று. (உசு)

உஎ. நச்சித்தற் சென்றார் நசைகொல்லா மாண்பினிதே
யுட்கில் வழிவாழா வூக்க மிகவினிதே
யெத்திறத் தானு மியைவ கரவாத
பற்றினிற் பாங்கினிய தில்.

எ-து—தன்னை நச்சிச்சென்றார் நசையைச் சிதையாத மாண்பினிது; தன்னை மதிப்பில்லாதவிடத்து வாழாத வுள்ளம் மிகவினிது; எப்பெற்றியாயினுங் பிறர்க்குக் கொடுக்கப்பொருந்துவதனைக் கரவாத மனைவாழ்வு போல நன்றாகவினியது பிறிதில்லை; எ-று. (உஎ)

உஅ. தானங் கொடுப்பான் றகையாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே
யூனங்கொண் டாடா ருறுதி யுடையவை
கோண்முறையாற் கோட லினிது.

எ-து—தானஞ் செய்வானது தகுதியது தலைமை இனிது; மானங் கெடவந்ததாயின் உயிர் வாழாமை மிக வினிது; குற்றங்கொண்டாடாது நன்மையுடையனவற்றை மனத்திற் கொள்ளு முறைமையாற் கோடல் இனிது; எ-று. (உஅ)

உகூ. ஆற்றானை யாற்றென் றலையாமை முன்னினிதே
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே
யாக்க மழியினு மல்லவை கூறாத
தேர்ச்சியிற் றேர்வினிய தில்.

எ-று—ஒன்றனைச் செய்யமாட்டாதானைச் செய்யென்றலையாமை மிகவுமினிது; கூற்றத்தின் வரவுண்டென்று நினைத்துவாழ்தல் இனிது; செல்வமழியினும் பாவமானவைகூறாத ஆராய்ச்சிபோல ஆராய்தன்மிக வினியதில்லை; எ-று. (உகூ)

௩0. கயவரைக் கைகழிந்து வாழ்த லினிதே
யுயர்வுள்ளி யூக்கம் பிறத்த லினிதே
யெளிய ரிவரென் றிகழ்ந்துரையா ராகி
யொளிபட வாழ்த லினிது.

எ-து—கீழாயினுரைக் கைகடந்து வாழ்தல் இனிது; உயர்ந்த செய்கைகளை நினைந்து ஊக்கமெழுதல் இனிது; எளியரிவரென்று இகழ்ந்து பேசாராகிப் புகழ்பட வாழ்தல் இனிது; எ-று. (௩௦)

௩௧. நன்றிப் பயன்றூக்கி வாழ்த னனியினிதே
மன்றக் கொடும்பா டுரையாத மாண்பினிதே
யன்றறிவா ரியாரென் றடைக்கலம் வெளவாத
நன்றியி னன்கினிய தில்.

எ-து—ஒருவன் செய்த நன்றியைப் பயன்றூக்கிவாழ்தல் மிகவினிது; மன்றத்தின்கணின்று வழக்கழிவு சொல்லாமை மிகவினிது; அடைக்கலம் வைத்தவன்று அறிவார்யார் என்றுசொல்லி அதனை வெளவாத நன்றியேபோல மிகவுமினியதில்லை; எ-று. (௩௧)

௩௨. அடைந்தார் துயர்கூரா வாற்ற லினிதே
கடன்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்விய ராயினு மாராய்ந்
தறிந்துரைத்த லாற்ற வினிது.

எ-து—தம்மையடைந்தார் துயர்கூராதவாறு ஆற்றல் இனிது; தனிசுகொண்டாயினுஞ் செய்யத்தகுவன செய்தல் இனிது; மிகவடைந்த கேள்வியராயினும் ஆராய்ந்தறிந்தே ஒன்றைச் சொல்லுதல் இனிது; எ-று.

௩௩. கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருளினிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே
தெற்றென வின்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்
பத்திமையிற் பாங்கினிய தில்.

எ-து—நூல்களைக் கற்றுணர்ந்தார் சொல்லுங் கருமப்பொருள் இனிது; பற்றுக்கோடா யமையாத வேந்தன்கீழ் வாழாமை மிகவும் இனிது; தன்மையின்றியே எளியாராய்த் தம்மைத் தேறியடைந்தாரைத் தீங்கு செய்யாத காதலினன்றாக இனியதில்லை; எ-று. (௩௩)

௩௪. ஊர்முனியா செய்தொழுகு மூக்க மிகவினிதே
தானே மடிந்திராத் தாளாண்மை முன்னினிதே
வான்மயங்கு மண்டமருண் மாறாத மாமன்னர்
தானை தடுத்த லினிது.

எ-து—தானிருக்குமூர் வெறுக்கத்தகாத செயல்களைச் செய்யும் மடிந் திராதான் முயற்சி மிகவு மினிது; வாண்மிடைந்து மண்டியவமருள் மீளாத வூக்கத்தினையுடைய மன்னரது தானையை ஒருவன் விலக்குதல் இனிது; எ-று (௩௪)

௩௫. எல்லிப் பொழுது வழங்காமை முன்னினிதே
சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதன் மாண்பினிதே
புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுத லினிது.

எ-து—இரவின்கண் வழிபோகாமை மிகவினிது; ஒன்றைச்சொல்லும் பொழுது சோர்வுபடாமற் சொல்லுதன்மாண்பு இனிது; வலியத்தாங்கள் வந்து பொருந்தி நட்புக்கொளினும் ஒரு பொருளாக மதிக்கப்படாதார் கேண்மையைக் கொள்ளாதே நீக்குதல் இனிது; எ-று (௩௫)

௩௬. ஒற்றினா னொற்றிப் பொருடெரிதன் முன்னினிதே
முற்றான் றெரிந்து முறைசெய்தன் முன்னினிதே
பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்
வெற்றல்வேல் வேந்தர்க் கினிது.

எ-து—ஒற்றாலே புறம்புள்ள செய்கைகளை ஒற்றுவித்தாராயுமாட்சி மன்னர்க்கினிது; செய்வதற்கு முன்னே ஆராய்ந்து முறைசெய்தன் மிக வுமினிது; ஒருவர்க்குப்பற்றிலனாய் எல்லாவுயிர்க்கும் பரிவுற்று நன்மையறி தல் வென்றியையுடைய வேந்தர்க்கு இனிது; எ-று. வெற்றல்—வென்றி.

௩௭. அவ்வித் தழுக்கா றுரையாமை முன்னினிதே
செவ்வியனாய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே
கவ்வித்தாங் கொண்டுதாங் கண்டது காமுற்று
வவ்வார் விடுத லினிது.

எ-து—மன்னர் மனக்கோட்டஞ்செய்து அழுக்காறு சொல்லாமை மிகவினிது; தன் மனஞ் செவ்வியனாய்ச் சினத்தைவெகுண்டு நீக்கியொழு குதல் இனிது; யாப்புறக்கொண்டு தாங்கண்டபொருளைக் காதலித்து வெள வாதொழித னன்று; எ-று. (௩௭)

௩௮. இளமையை மூப்பென் றுணர்த லினிதே
கிளைஞர்மாட் டச்சின்மை கேட்ட லினிதே

தடமென் பணைத்தோட் டளிரிய லாளை
விடமென் றுணர்த லினிது.

எ-து—தமக்குள்ள இளமையை மூப்பாகக்கருதி மகிழாமை இனிது; நட்டார்மாட்டு அஞ்சத்தகும் துன்ப மில்லாமை கேட்டல் இனிது; மெல்லியதாய்ப் பெருத்த தோளையுடைய தளிரியலாளை நஞ்சென்று கருதல் இனிது; எ-று. கிளைஞர்மாட்டச்சின்மை கேட்டல்—நட்டார்மாட்டு அஞ்சத்தகுந் துன்பமில்லாமை கேட்டல். (ங அ)

ஙகூ. சிற்றா ளுடையான் படைக்கல மாண்பினிதே
நட்டா ருடையான் பகையாண்மை முன்னினிதே
யெத்துணையு மாற்ற வினிதென்ப பால்படுங்
கற்றா வுடையான் விருந்து.

எ-து—சிற்றாளுடையான் படைக்கலமுடையனுதல் மாட்சிமைப்பட இனிது; சுற்றத்தாரை யுடையான் தன் பகைவரோடு பொருதல் இனிது; பாலையுடைய கற்றாவை யுடையான் விருந்து மிகவு மினிது; எ-று (ஙகூ)

சய. பிச்சைபுக் குண்பான் பிளிற்றாமை முன்னினிதே
துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே
யுற்றபே ராசை கருதி யறனொரூஉ
மொற்க மிலாமை யினிது.

எ-து—பிச்சைபுக் குண்பான் வெகுளாமை மிகவினிது; ஒதுக்கிருந்து துன்பமுறாத மாட்சிமை இனிது; மிக்கவூதியங்கருதி அறத்தை நீங்கு மனத்தின்கட்டளர்ச்சியில்லாமை இனிது; எ-று. (சய)

சக. பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே
வித்துக்குற் றுண்ணா விழுப்ப மிகவினிதே
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினிய தில்.

எ-து—தானிறுக்கும் இறையிற் பத்துமடங்கிறுத்தும் தம் பதியின் கணிருந்து வாழ்தல் இனிதே; நன்மையாய விளைவிற்குக் காரணங்களைச் சிதைத்துண்ணாத விழுப்பம் மிகவினிது; பலநாளும் நன்மையுடைய நூல்களைப் பழுதுபடாமே கற்றலிற் காழினியதில்லை; எ-று (சக)

இனியது நாற்பது முற்றிற்று.

---

# இனியதுநாற்பது.

## செய்யுண் முதற்குறிப்பு அகராதி.

---


அடைந்தார் - ௩௨.
அதர்சென்று - ௧௨.
அந்தணர் - ௮.
அவ்வித்த - ௩௭.
ஆற்றானை - ௨௯.
ஆற்றுந்துணை - ௭.
இளமையை - ௩௮.
உடையான் - ௩.
ஊருங்கலி - ௯.
ஊர்முனி - ௩௪.
எல்லிப்பொ - ௩௫.
ஏவதுமாறா - ௪.
ஐவாய - ௨௬.
ஒற்றினா - ௩௬.
கடமுண்டு - ௧௧.
கண்மூன்று - ௧.
கயவரைக் - ௩௦.
கற்றறிந் - ௩௩.
கற்றார்முற் - ௧௭.
காவோடறக் - ௨௪.
குழவிதளர் - ௧௫.
குழவிபிணி - ௧௩.
கொல்லாமை - ௬.
சலவரைச் - ௨௧.
சிற்றாளுடை - ௩௯.
தங்கணமர் - ௧௦.
தானங்கொடுப் - ௨௮.
நச்சித்தற் - ௨௭.
நட்டார்க் - ௧௮.
நட்டார்ப் - ௨௦.
நன்றிப்பயன் - ௩௧.
பத்துக்கொடுத் - ௪௧.
பிச்சைபுக்கா - ௨.
பிச்சைபுக்குண் - ௪௦.
பிறன்கைப் - ௨௨.
பிறன்மனை - ௧௬.
மன்றின்முழு - ௧௯.
யானமழிந்த - ௧௪.
யானையுடைப் - ௫.
வருவாயறிந் - ௨௩.
வெல்வது - ௨௫.

# இனியது நாற்பது

# அரும்பத அகராதி.

அகறல் - நீங்குதல், ௧௧. [ன்மை, ௩௮
அச்சின்மை - அஞ்சத்தகுந் துன்பமி
அடைகரை - கரைமருங்கு, ௫
அதர் - வழி, ௧௨
அந்தணர் - மறையவர், ௮
அமர்பு - சேர்வு, ௧௦ [தல், ௩௭
அவ்வித்தல் - மனக்கோட்டஞ் செய்
ஆக்கம் - செல்வம், ௨௯
ஆக்குதல் - தேடுதல், ௨௦
ஆர்வம் - அன்பு, ௯
ஆற்ற - நிரம்ப, ௮
ஆற்றுதல் - செய்தல், ௨௯
ஆற்றுந்துணையும் - இயலுமளவும், ௭
உட்கு - மதிப்பு, ௨௭
உய்த்தல் - நடாத்தல், ௨௫
உரன் - வலி, ௯
ஊர்தல் - நடாத்துதல், ௯
ஊனம் - குற்றம், ௨௮
எஞ்சுதல் - குறைதல், ௧௯
எட்டுணை - எள்ளளவு, ௧௭
எத்துணையும் - எல்லாவாற்றாலும், ௧௭
எல்லி - இரவு, ௩௫ [௨௨
எனைமாண்பு - எல்லாமாட்சிமையும்,
ஏர்தல் - ஒத்தல், ௨
ஐவாய் - ஐம்பொறி, ௨௬
ஒல்லுந்துணை - இயலுமளவு, ௨௫
ஒற்கம் - தளர்ச்சி, ௪௦
ஒற்று - ஒற்றர், ௩௬
கடம் - தனிசு, ௧௧
கடிதல் - நீங்குதல், ௩௭
கடிது - மிக, ௧
கடை - வாயிற்கடை, ௧௬
கதம் - வெகுளி, ௯
கயவர் - கீழாயினோர், ௩௦
கலிமா - மிக்கமா, ௯
கவ்வல் - யாப்புறக் கோடல், ௩௭
கழிதல் - கடத்தல், ௩௦
காட்சி - அறிவு, ௨௬
காண்பு - காண்டல், ௧௦

காமுறுதல் - காதலித்தல், ௨௫
கான் - காடு, ௫
குதர்செல்லுதல் - கோட்டுதல், ௧௨
குறுதல் - சிதைத்தல், ௪௧
கைக்கொடுத்தல் - வந்துதவுதல், ௨
கைத்து - கையினுணவு, ௧௨
கொடும்பாடு - வழக்கழிவு, ௩௧
கொல்லுதல் - சிதைத்தல், ௨௭
சமம் - செருக்களம், ௯
சலவர் - வஞ்சகர், ௨௧
சவை - அவை, ௨
செய்வது - இயல்வது, ௨.௫
செற்று - வெகுண்டு, ௩௭
சோர்வு - சொரிதல், ௧௬ [௨௮
தகையாண்மை - தகுதியதுதலைமை,
தந்திரம் - நூல், ௧௯
தவசி - அருந்தவர், ௧௯
தாளாண்மை - முயற்சி, ௩௩
தானம் - இருப்பு, ௧௬
திரு - செல்வம், ௧௩
தீங்கூக்குதல் - தீங்குசெய்தல், ௩௩
தீர்தல் - நீங்குதல், ௧௩
துச்சிலிருத்தல் - ஒதுக்கிருத்தல், ௪௦
தெற்றவும் - தெளியவும், ௨ [௩௯
நட்டார் - உற்றார், ௨௦; சுற்றத்தார்,
நவை - குற்றம், ௬
நிறை - திண்மை, ௬
நெடியாமை-நீட்டியாமை ந [தல் ௩௯
பகையாண்மை- பகைவரோடுபொரு
பங்கம் - குற்றம், ௧௦
படுதல் - கெடுதல், ௨௮
பட்டாங்கு - உண்மையானநெறி, ௨௦
பணை - பெருமை, ௩௮
பத்திமை - காதல், ௩௩
பந்தம் - சுற்றம், ௮
பயம் - பயன், ௭
பற்று - மனைவாழ்வு, ௨௭ [௨௩
பாங்கு - நன்மை, ௩௩, ௩௬ சார்வு
பாத்துற்று - பரிவுற்று, ௩௬

பாற்படுதல் - நெறிப்படுதல், எ
பிளிற்றாமை - வெகுளாமை, சഠ
பீடு - பெருமை, கஉ
புரிதல் - செய்தல், உஉ
புலவர் - அறிவுடையார், உஉ
புல்லுதல் - மேவுதல், உசு
புறங்கூறுதல் - பழிகூறுதல், உ0
பெட்டவை - நினைத்தவை, உரு
பெருவகை - பெரிய பயன், உரு
பேணுதல் - விரும்புதல், உ0
பேது - மயக்கம், கூ
பேராசை - மிக்கவூதியம், ச0
பொருளல்லார் - ஒருபொருளாகமதி[க்கப்படாதார், ௩௫
பொறை - ஆற்றல், உ௫
மதன் - களிப்பு, கசு
மயங்கல் - மிடைதல், ௩ச
மயரிகள் - மயக்கமுடையார், க௩; அ[றிவில்லார், உஉ
மலர்தலை - அகன்றவிடம், உக
மறம் - வீரம், கசு
மனை - மனையாள், கசு
மன்று - அம்பலம், கக
மன்னுதல் - வாழ்தல், உக
மா - பெருமை, கசு
மாராயன் - அரசன், சு
மாறுதல் - மீளுதல், ௩ச
மானிடவர் - மக்கள், கச
முட்டின்மை - குறையின்மை, உ0
முழுமக்கள் - அறிவுடையார், கக
முறுவல் - நகை, உ
முனிதல் - வெறுத்தல், ௩ச
வருவாய் - பொருள்வருவாய், உ௩
வலவைகள் - நாணிலிகள், எ
வழக்கு - வண்மை, ௩
வழங்கல் - வழிபோகுதல், ௩௫
வறனுழத்தல் - நீரின்றிவருந்தல், கசு
வாய்ப்புடையார் - பழுதிலர், எ
வாழ்தல் - ஒழுகுதல், உக
வான் - மழை, கசு
விடம் - நஞ்சு, ௩அ
வினையுடையான் - வினைகிழவன், க௫
வெய்துயிர்த்தல் - வெம்மையுறுதல், [க௫
வெற்றல் - வென்றி, ௩சு